# TAMIL NADU
# GOVERNMENT GAZETTE

PUBLISHED BY AUTHORITY

**No.6] CHENNAI WEDNESDAY, FEBRUARY 16,2011**
**Maasi 4, Thiruvalluvar Aandu-2042**


## Part VI --- Section 2
(Supplement)

**NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.**

## 2011ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையக் கட்டணங்கள் மற்றும் அபராதங்கள் (திருத்தம்) ஒழுங்குமுறைவிதிகள்

**(அறிவிக்கை எண் த.மி.ஒ.ஆ./ F& F / 4 / 2–6, நாள் 04–02–2011)**
(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்திய சட்டம் 36/2003) 86ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (எ) கூறின் மூலம் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைச் செலுத்தி, 2004ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணையக் கட்டணங்கள் மற்றும் அபராதங்கள் ஒழுங்குமுறை விதிகளை, 2004 பிப்ரவரி 18ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் குறித்துரைத்தும் அறிவிக்கை செய்துமுள்ளது என்பதாலும்,

மேலும் முன்னர் தனியாக உள்ளடங்காத ஒருசில அலுவற்பணிகள் பொறுத்து கட்டணங்கள் வசூலிப்பதற்காக வகைசெய்வது குறித்து ஒருசில இடர்ப்பாடுகளை நீக்கும்பொருட்டு மேற்சொன்ன ஒழுங்குமுறை விதிகளுக்குத் திருத்தங்கள் பிறப்பிப்பது அவசியம் என்று கருதுவதாலும் மற்றும் அத்திருத்தங்கள் முன்னரே வெளியிடப்பட்டுள்ளது என்பதாலும்,

தற்போது, அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்திய சட்டம் 36/2003) 86ஆம் பிரிவின் (1)ஆம் உட்–பிரிவின் (எ)கூறின் மூலம் தனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன்பொருட்டு அதனை இயல்விக்கும் பிற அதிகாரங்கள் அனைத்தையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், (இதன் பின்பு இதில் முதன்மை ஒழுங்குமுறை விதிகள் என்று குறிப்பிடப்படும்) 2004ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையக் கட்டணங்கள் மற்றும் அபராதங்கள் ஒழுங்குமுறை விதிகளுக்குப் பின்வரும் திருத்தங்களைக் குறித்துரைக்கிறது :

### 2011ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையக் கட்டணங்கள் மற்றும் அபராதங்கள் (திருத்தம்) ஒழுங்குமுறை விதிகள்

1. **குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் :**

(i) இந்த ஒழுங்குமுறை விதிகள், 2011ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையக் கட்டணங்கள் மற்றும் அபராதங்கள் (திருத்தம்) ஒழுங்குமுறை விதிகள் என்று வழங்கப்பெறும்.

(ii) இவை, தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட தேதியன்று நடைமுறைக்கு வரும்.

**2. முதன்மை ஒழுங்குமுறை விதிகளின் 6ஆம் ஒழுங்குமுறை விதியின் திருத்தம் :**

முதன்மை ஒழுங்குமுறை விதியில், 6ஆம் ஒழுங்குமுறை விதியில், அட்டவணையில்,–

(அ) (1)ஆம் இனம் மற்றும் அது தொடர்பான பதிவுக்குப் பதிலாகப் பின்வரும் இனம் மற்றும் பதிவு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :–

| | | |
|---|---|---|
| "1. | மின்கட்டமைப்பு, மொத்த அல்லது சில்லறை மின்கட்டணத்தை நிர்ணயம் செய்தல். | தற்போதுள்ள உரிமம்தாரரைப் பொறுத்தவரை முந்திய ஆண்டின் வருவாய் வரவுகளில் அல்லது, நேர்வுக்கேற்ப, புதிய உரிமம்தாரரைப் பொறுத்தவரை ஆணையத்தினால் மின்கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்ட ஆண்டில் எதிர்பார்க்கப்படும் வருவாய் வரவுகளில் 0.02 சதவீதம் அதிகபட்ச வரம்பு ரூ.2. 5 கோடிகள் ஆகும்" |

(ஆ) 6(அ), 6(ஆ) மற்றும் 6(இ) இனங்கள் மற்றும் அவை தொடர்பான பதிவுகளுக்குப் பதிலாகப் பின்வரும் இனம் மற்றும் பதிவுகள், முறையே, அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது, –

| | |
|---|---|
| " 6(அ) : பிற பட்டியலிடப்பட்ட வகைகளில் உள்ளக்கப்படாத, தனிப்பட்டவர்களால் தாக்கல் செய்யப்படும் பல்வகை விண்ணப்பங்கள் | ..... ..... ரூ.1,000/–" |
| "6(ஆ) : பிற பட்டியலிடப்பட்ட வகைகளில், உள்ளடக்கப்படாத மற்றும் 1956ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின் (சட்ட எண் 1 / 1956)படி பதிவு செய்யப்பட்ட நிறுவனம் எதனாலும் அல்லது நிறுவகம் அல்லது பிற கூட்டமைப்பு எதனாலும் தாக்கல் செய்யப்படும் பல்வகை விண்ணப்பங்கள் | .......... ரூ.10,000/– " |

| | |
|---|---|
| "6(இ) : ஆணையத்தின் முன்பு தாக்கல் செய்யப்பட்ட முதன்மையான மனு எதிலுமுள்ள வழக்கிடை விண்ணப்பம் எதற்காகவும் | .......... ரூ.500/– " |

(இ) 7ஆம் இனம் மற்றும் அது தொடர்பான பதிவுக்குப் பதிலாக பின்வரும் இனம் மற்றும் பதிவு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது : –

| | |
|---|---|
| " 7 : பிற பட்டியலிடப்பட்ட வகைகளில் உள்ளடக்கப்படாத கழகங்கள் அல்லது குழுமங்களால் தாக்கல் செய்யப்படும் பல்வகை மனுக்கள் | |
| " 7 (அ) : நுகர்வோரின் அல்லது மின் உற்பத்தியாளர்களின் பதிவு செய்யப்பட்ட கழகங்களால் தாக்கல் செய்யப்படும் பல்வகை மனுக்கள் | ....... ரூ.1,00,000/–" |
| " 7(ஆ) : பிற பதிவு செய்யப்பட்ட கழகங்களால் தாக்கல் செய்யப்படும் பல்வகை மனுக்கள் | ....... ரூ.10,000/–" |

(ஈ) இனம் **7–அ** மற்றும் அதுதொடர்பான பதிவுக்குப் பதிலாகப் பின்வரும் பதிவு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :–

| | |
|---|---|
| " **7–அ :** மின்சாரச் சட்டத்தின் 86(1)(ஊ) பிரிவின்படி உரிமம்தாரர்களுக்கும் மின்உற்பத்தி நிறுமங்களுக்குமிடை–யேயான பூசல்களை நீதிமுறையில் தீர்ப்பதற்காக | குறைந்தபட்சம் ரூ.20,000/–க்கு உட்பட்டு பூசலிலுள்ள தொகையின் 1 சதவீதம் " |

**3. முதன்மை ஒழுங்குமுறை விதிகளின் 7ஆம் ஒழுங்குமுறை விதியின் திருத்தம் :–**

முதன்மை ஒழுங்குமுறை விதிகளில், 9ஆம் ஒழுங்குமுறைவிதியில், அட்டவணையில் (ஆ)(i) மற்றும் (ஆ) (ii) இனங்கள் மற்றும் அது தொடர்பான பதிவுகளுக்குப் பதிலாக பின்வரும் இனம் மற்றும் பதிவுகள் முறையே அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது : –

| | | |
|---|---|---|
| ‘‘(ஆ)(i) ஆண்டு உரிமக் கட்டணங்கள் – | மின் செலுத்தல்... | குறைந்தபட்சம் ரூ.50,000/–க்கு உட்பட்டு முந்திய ஆண்டு முடிவில் கிடைக்கக் கூடிய மெகாவாட் திறன் ஒவ்வொன்றுக்கும் ரூ.500/–’’. |
| ‘‘(ஆ)(ii) ஆண்டு உரிமக்கட்டணங்கள் – | மின்பகிர்மானம் ... | குறைந்தபட்சம் ரூ.20 லட்சம் மற்றும் அதிகபட்சம் ரூ.2 கோடிக்கு உட்பட்டு இந்த ஆண்டின் போது விற்கப் படுவதற்கு உத்தேசிக்கப்பட்ட மின்சாரம் யூனிட்டு ஒன்றுக்கு 0.02 காசு’’. |

(ஆணையத்தின் ஆணைப்படி)

**(ரா.வெ. ராஜா)**
செயலாளர்